# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, மாச்சு மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1998, மாச்சு மாதம் 13 திகதிய* இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் **வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 5.25** **தபாற் செலவு: ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ. 049/95

### றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒரு சங்கம் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கம் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கம் 1894 திசெம்பர் 24 ஆம் திகதி உருவாக்கப் பட்டுள்ளதாதலாலும் ; முன்னுரை.

சொல்லப்பட்ட சங்கம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாக உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அது இதுவரையில் வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் ;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தில் உறுப்பினர்களாகத் தற்போதுள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படுவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் "றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கம்" என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக விருத்தலும் வேண்டும் ; (இது இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்துடன் எல்லா நீதிமன்றங்களிலும் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அது விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும். றிச்மண்ட் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

2 டீ 036692 1,100 –(95/ 07)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :–

(அ) கல்லூரியின் பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய எல்லோரிடையேயும் நல்ல புரிந்துணர்வைப் பேணிவளர்த்தல் ;

(ஆ) கல்லூரியுடன் சகல பழைய மாணவர்களையும் இணைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தல் ;

(இ) கல்லூரியின் நிதி உறுதிநிலை கருதியும் நலன்புரி நடவடிக்கைகளுக்குமாக பழைய மாணவர்கள் தமது அர்த்தமுள்ள பங்கை ஆற்றுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல் ;

(ஈ) றிச்மண்ட் மரபுகளை நிலைநாட்டுவதற்கு கல்லூரிக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ;

(உ) பழைய மாணவர்களிடையே நல்லுறவையும், சகோதரத்துவத்தையும் மேம்படுத்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் எல்லா அல்லது ஏதேனும் ஒரு குறிக்கோளை எய்துவதற்கு உகந்தனவான அல்லது இடைநேர்விளைவான அத்தகைய எல்லாக் காரியங்களையும் கருமங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும், சேகரிக்கவும் அதன் நிதியை முதலீடு செய்யவும், அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகியவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்றுக்குழு ஒன்றினால் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும். — கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கும் நிறைவேற்றுக்குழுவே கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக் குழுவாக அமைதல் வேண்டும்.

6. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்குக் குறையாத எண்ணிக்கையினரின் வாக்குகளைக் கொண்டும், உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும் நிறைவேற்றுக்குழுவின் பதவிதாங்குநர்களையும், உறுப்பினர் களையும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர் கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரைத் தேர்ந்தெடுப்ப தற்காகவும் கூட்டுத்தாபனத்தினதும் நிறைவேற்றுக்குழுவினதும் கூட்டங்களின் அலுவல்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைக்காகவும் அத்துடன் பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல், அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் (அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத) விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்கு தல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டத்தில் அதேமுறையிலும் மாற்றப்படலாம், அவற்றிற்கு எதுவும் சேர்க் கப்படலாம், அவை திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம். — கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

7. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்திற்கு உள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இத்தால் அமைத்துருவாக் கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியன்று சங்கத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஒப்பப் பணங்களும் உதவுதொகைகளும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத் தப்படுதலும் வேண்டும். — சங்கத்தினால் செலுத்தப்படற்பால தான அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற்பால தான கடன்கள்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம் என்பது.

8. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக்கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்துடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் சொல்லப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, நிறைவேற்றுக் குழுவின் இரு உறுப்பினர்களினதும் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான எந்தச் சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தம் சமுகத்தின் இலச்சினை பொறிக்கப்பட்டதற்கு எண்பிப்பாக அச்சாதனத்தின் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பமிடல், சாட்சியொருவராக எவரேனும் ஆள் கையொப்பமிடுவதற்குத் தனிவேறானதாயிருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் , அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387; (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.